
நகரத்தார்



நகரத்தார்

திங்கள் இதழ்

61-D, உசுமான் சாலை - சென்னை - 17.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

சௌமிய மார்கழி ❋ டிசம்பர் 1969

ஆண்டுக் கட்டணம் ரூ. 3-50

ஆசிரியர்
புலவர் நாகசண்முகம்

பரிந்துரையாளர்
எஸ். பிஎல். பழநியப்பா, பி ஏ., பி.எல்.

குறிப்பு ஒன்று — பேரேடு ஒன்பது

அடுத்த இதழில்

சென்னை நகரத்தார் ஐக்கிய சங்கத்துப் பொதுக்குழுக கூட்ட விவரங்கள்.

❋

ஈரோடு நகரத்தார் சங்கத்தில் தமிழ்க் கடல் ''ராயசொ'' அவர்களுக்குக் கொடுக்கப்பெற்ற வரவேற்பு.

❋

பர்மாவில் உள்ள ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர இடைக்கால சபை நிர்வாகிகள் தேர்வு, தைப்பூச விழா பற்றிய செய்திகள்.

❋

காரைக்குடித் தமிழ்ச்சங்கம், காரைக்குடி அழகப்பா தமிழ் மன்றத்தில் பாராட்டப்பெற்ற மூன்று டாக்டர்கள் பற்றிய செய்திகள்.

❋

ஆறு. அழகப்பன் எம்.ஏ., எம் லிட். அவர்களின் கறிவேப்பிலை ரடகநூல்பற்றி இதழாசிரியர் புலவர் எழுதும் ஆய்வுரை.

❋

புதிய பகுதி

கேள்வி? பதில்!

நம் மரபினருக்கு ஆக்கம் தரத்தக்க வகையில் உள்ள பல் வேறு துறைக் கேள்விகளை வரவேற்கின்றோம். பொதுக் கேள்வி களையும்தான் அனுப்பி வையுங்களேன்!

குன்றுதோறும் ஆடும் குமரகுருபரன்
இதழ் அட்டையை அலங்கரிக்கின்றான்.

உ

சிவமயம்



எழுச்சி ! வளர்ச்சி !

காலமெல்லாம் வற்ருத காவேரிக்கும் அணை தேவைப் படுகிறது.

பளிங்குமாளிகையாயினும் படிகின்ற தூசியைத் துடைக்க வேண்டியதிருக்கிறது.

புகழ்பெற்றது, பெருமைக்கு உரியது, தனக்கெனச் சிறிதும் பிறர்க்கெனப் பெரிதும் வாழ்ந்தது, மன்னர்க்கு முடிசூட்டியது என்ற இத்தகைய பெருமைகள் எல்லாம் உடையது நம் மரபு என்ருலும், காலப்போக்கில் பல துறைகளிலும் சோதனைகள் மிகுந்து வேதனைகள் படர்ந்து வருகின்றன.

இதனை நீக்க ஆங்காங்கே நம் மரபுச் சங்கங்கள் தோன்றி, கல்விக்கும் ஏனைப் பலதுறைக்கும் உதவிகள் புரிந்து வருகின்றன.


உதவி கிட்டினல் மட்டும் போதுமா ? நம் உழைப்பும் இன்றியமையாததல்லவா ?

காலப்போக்கிற்கேற்ப நம் கருத்து மாறவேண்டும் அல்லவா ?

மரபினர் தம் குறைகளைப் போக்கிக் கொள்ளவும் மகிழ்ந்து வாழவும் பாடுபட, காரைக்குடியில் டாக்டர் வ. சுப. மாணிக்கனார் அவர்கள் தலைமையில் தோன்றியுள்ள நகரத்தார் முன்னேற்றக் கழகத்தினை இருகை ஏற்று வரவேற்கின்றோம்.

இதுபோன்ற நல்ல அமைப்புகளை நம் மரபு இளைஞர் அனைவரும் எழுச்சியோடு ஏற்று வளர்ச்சிபெற வேண்டும் என்பதே நமது பணிவான வேண்டுதல் ஆகும்.

வேலை தாரீர்!



பெயர் : சுப . சாத்தப்பன் பி. இ.

படிப்பு : பி. இ. மெக்கானிக்கல், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

பிறந்த நாள் : 12-1-1946 (வயது 24)

தெரிந்த மொழிகள் : தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, இந்தி.

நிரந்தர முகவரி : சிவன்கோவில் வடக்கு வீதி, நெற்குப்பை. (இராமநாதபுரம் மாவட்டம்.)

தற்போதைய முகவரி : தமிழ்நாடு அலுமினியம் மெட்டல் ஒர்க்ஸ் G1. தொழிற்பேட்டை, திண்டுக்கல்-3.

அனுபவம் : தயாரிப்பு, தொழிலாளர் மேற்பார்வை நிர்வாகியாகத் தமிழ்நாடு அலுமினியம் மெட்டல் ஒர்க்ஸில் மே, 1969-லிருந்து பணியாற்றி வருகிறேன்.

ஆந்திராவில் டாத்பத்ரியில் உள்ள தி ஹிந்துஸ்தான் மினரல் புராடக்ட்ஸ் கம்பெனி பிரைவேட் லிமிடெட்டில் ஒன்பது மாதங்கள் தயாரிப்பு மேற்பார்வை நிர்வாகத்தில் இருந்திருக்கிறேன்.

பிற குறிப்புகள் :

1. செயலாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழக நிழற்படக் கழகம் - பொதுக்குழு உறுப்பினர்.
2. என். சி. சி.—தரைப்படைப் பிரிவு நான்கு ஆண்டுகள்.
3. சமூக சேவை :—இரண்டு ஆண்டுகள் இரவுப் பள்ளி ஆசிரியர் பணி.
4. விளையாட்டுக்கள் :—டென்னிஸ், பாட்மின்டன், கவடி, சதுரங்கம்.

பொழுதுபோக்கு :—நிழற்படம் எடுத்தல்.

தொழில் பயிற்சி : வடலூரில் உள்ள சேஷசாயி இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டில் 4-வாரம் பயிற்சி.

இரண்டு டாக்டர்கள்



டாக்டர் மெ. சுந்தரம்

தமிழ் கூறும் நல் உலகம் தொடர்ந்து பல அறிஞர்களை நாட்டிற்குத் தந்து வந்திருக்கிறது.

அந்த அறிஞர்களில் சிலர் நம் மரபினர் என்பது நமக்கு எல்லையில்லாத மகிழ்ச்சியைத் தருவதாகும்.

டாக்டர் மெ. சுந்தரம் அவர்கள் கருவில் திருவுடையவர்கள். இளமை முதலே வியக்கத்தக்க வகையில் மொழிப்புலமை பெற்றவர்கள்.

எழுத்தாற்றலும் எழில்மிக்க சொல்லாற்றலும் உடையவர்கள். திருச்சி மாவட்டம் வேந்தன் பட்டியைச் சொந்த ஊராக உடையவர்கள். இப்பொழுது அவர்கள் மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கி வருகிறார்கள்.

வித்துவான், எம்.ஏ., பிஎச்.டி. ஆகிய பட்டங்களைச் சென்னைப் பல்கலைக் கழகத்திலும் பி.ஓ.எல்., எம். லிட். ஆகிய பட்டங்களை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், மொழியியல் சான்றிதழ் தன்னை பூனா டெக்கான் கல்லூரியிலும் அவர்கள் பெற்றுள்ளார்கள்.

சிங்கப்பூர் தமிழ்ப் பிரதிநிதிகள் குழுவின் அழைப்பை ஏற்று 1960–ஆம் ஆண்டு மலேசியா சென்று தமிழ்மொழி இலக்கியம் பற்றித் தமிழிலும் ஆங்கிலத்திலும் விரிவுரைகள் நிகழ்த்தி உள்ளார்கள்.

கிழக்கு ஜெர்மனியில் உள்ள பல்கலைக் கழகம் ஒன்றிற்கு ரீட

ராக 1962-ஆம் ஆண்டு இந்திய அரசினரால் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். ஆனால் எதிர் பாராது அப்பணியினை அவர்கள் மேற்கொள்ளவில்லை.

கிராமிய இலக்கிய ஆராய்ச் சிக்காக ஆயிரத்திற்கும் மேலான நாட்டுப் பாடல்களைத் தொகுத் துள்ளார்கள். தென்னிந்தியா, இலங்கை, மலேசியா, நாட்டுப் பாடல்கள் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார்கள்.

நகரத்தார் சமூகவரலாறுபற்றி ஆராய்ச்சி மேற்கொண்டுள்ளார் கள்.

யூஜின் - ஏ. நிடா எழுதிய மார் பாலஜி (Morphology) என்ற நூலில் ஒரு பகுதியைத் தமிழாக்கி யுள்ளார்கள். ஜெர்மன் மொழி யிலும் இவர்களுக்குப் பயிற்சி உண்டு.

கல்லாடம் பற்றி ஆராய்ந்து எம்.லிட்., பட்டமும் - சங்கஇலக் கியத்தில் சரித்திரச் சான்றுகள் பற்றி ஆராய்ந்து பிஎச். டி., பட்டமும் பெற்றுள்ளார்கள்.

1959-ஆம் ஆண்டு யாழ்ப் பாணத்தில் உள்ள திருக்குறள் கழக அழைப்பினை ஏற்றுத் திருக் குறள் மாநாட்டில் பங்கு கொண்டு, திருக்குறள் குறித்து விரிவுரை ஆற்றியுள்ளார்கள்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவிக் குழு உறுப்பினராகத் தமிழக அரசினரால் நியமிக்கப் பட்டுள்ளார்கள்.

ஒரிசா மாநிலத்தில் உள்ள சம்பல்பூர் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பிரிவுத் தலைவராகவும் தமிழ்த்தேர்வுக்குழுத் தலைவராக வும் பணியாற்றி வருகிறார்கள்.

தமிழ்ப் புலவர் குழு உறுப்பின ராகவும்நகரத்தார் முன்னேற்றக் கழகச் செயற்குழு உறுப்பினராக வும் திகழ்கின்றார்கள். ○



டாக்டர்

தமிழண்ணல்

இராம. பெரியகருப்பன்

உழைப்பு - உறுதி, விடா முயற்சி இவை ஒருவரை உயர்த் தியே தீரும் என்பதற்கு,மிக நல்ல எடுத்துக்காட்டாக திரு. இராம. பெரியகருப்பன் அவர்கள் விளங் குகிறார்கள்.

எல்லார்க்கும் அன்பராகவும், தமிழுக்கு அண்ணலாகவும் - உரைநடை எழுதுவதிலும், கவி தை இயற்றுவதிலும் வல்லவராக வும் விளங்குகின்ற அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம் நெற்குப்பையில் 1928 – ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 12-ஆம் நாள் பிறந்தவர்கள். மேலைச் சிவ புரி சன்மார்க்க சபை கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் தமிழ் கற்று 1943-ஆம் ஆண்டு தேர்ச்சி பெற்றவர்கள்.

அதன்பின் தொடர்ந்து பதின் மூன்று ஆண்டுகள் (ஈரோடு மாசன உயர் நிலைப்பள்ளியில் ஓர் ஆண்டு, காரைக்குடி மீனாட்சி சுந்தரேசுவரர் உயர் நிலைப்பள்ளி யில் பன்னிரண்டு ஆண்டுகள்)

தமிழாசிரியராகப் பணிபுரிந்துள்ளார்கள்.

1961-ஆம் ஆண்டுமுதல் தொடர்ந்து மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ்த் துறையில் பணிபுரிந்து வருகிருர்கள்.

1958-ஆம் ஆண்டு பி. ஏ. (பொருளாதாரம்) 1960-ஆம் ஆண்டு எம். ஏ. தமிழ் 1969-ஆம் ஆண்டு பிஎச். டி. முதலிய தகுதிகளேப் பெற்றுள்ளார்கள்.

டாக்டர் பட்ட ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட பொருள் சங்க இலக்கியமரபுகள் (Literary Convention in Sangam Poetry) என்பதாகும். இது விரைவில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் நூலாக வெளிவர இருக்கின்றது.

குழந்தை இலக்கியம், தொகுப்பு நூல்கள், திறனாய்வுக் கட்டுரைகள், சிந்தனைக் கட்டுரைகள் முதலிய பலதிறப்பட்ட பகுதிகளிலும் எளிய இனிய நடையில் எழுதுகின்ற வல்லமை மிக்கவர்கள். கவிதை உலகில் குறிப்பிடத்தக்க சிறப்புமிக்க இடத்தைப் பெற்றவர்கள். இவர்கள் கலந்து கொண்ட கவியரங்கங்கள் கணக்கற்றவை.

இவர்கள் தொகுத்த "தாலாட்டு" நூல் பெரும் புகழுக்கும் பெரும் விற்பனைக்கும் உரியதாகப் பல ஆண்டுகளாக விளங்கி வருகின்றது.

தமிழண்ணல் அவர்கள் இளமைக்காலத்தில் பொருளாதாரத்தில் மிகப் பின்தங்கிய நிலேயில் இருந்தமையால் அவர்கள் எல்லேயற்ற தடைகளேக் கடந்து தான் இந்த நிலேயைப் பெற்றுள்ளார்கள்.

அண்ணல் அவர்கள் தமிழ் முறையில் திருமணம் செய்து கொண்டவர்கள்.

1954-ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. கம்பன் புகழ் போற்றிக் கன்னித் தமிழ் வளர்த்து வருகின்ற நம்குலத்துப் பெருமகனுர் திரு. சா. கணேசன் M. L. C. அவர்கள் தலேமையில் தான் திருமணம் நடைபெற்றது.

புலமைச் செல்வம் மிக்கவரான டாக்டர் அவர்கள் மக்கட் செல்வத்திலும் குறைவற்று விளங்குகிருர்கள்.

பெரும் புலமையும், இனிய பண்பும், பல்துறை ஆற்றல்களும் நிறைந்த டாக்டர் அவர்கள் விரைவில் சிறந்த பொறுப்புகளே மேற்கொள்கின்ற நல் வாய்ப்பு நேரும் என நம்புகின்ருேம்.

★

அயலூர் நகரத்தார்

டாக்டர் இராம. சுப்பையா

'சோமலெ'

தலைசிறந்த அறிஞர் ஒருவரை, 1969-இல் தமிழ் பேசும் மக்கள் இழந்தனர். டாக்டர் இராம. சுப்பையா, மலேசியா பல்கலைக் கழகத்தில் இந்திய இயல் துறைத் தலைவராக—உலகத் தமிழ் மாநாடு கூட்டிய தவத்திரு தனிநாயக அடிகளார் அவ்வேலையிலிருந்து விலகிக் கொண்ட பிறகு-பணியாற்றி வந்தார். மலாயா நாட்டிலேயே மிகப் பெரிய பதவிகளுள் இது ஒன்று.

டாக்டர் இராம. சுப்பையா வேகுப்பட்டி ஊரினர். புகழ் பெற்ற சி. பழ. ராம. குடும்பத்து பழ. இராமநாதன் செட்டியார் அவர்களின் மூத்த மகன். இவர்களுடைய குடும்பத்துக்குச் சில தலைமுறையாகக் கோலக் கங்சாறில் தொழில் உண்டு. சுப்பையா அவ்வூரில் ஒரு பள்ளி ஆசிரியராக இருந்தனர். பிறகு, தம் சொந்த முயற்சியால் பி. ஏ., எம் ஏ., பட்டங்களை மலாயா நாட்டில் பெற்றார். பின்னர் பேச்சுத் தமிழ் பற்றி ஆராய்ந்து, லண்டன் பல்கலைக்கழகத்தில் படித்து பிஎச். டி., பட்டம் பெற்றார்.

லண்டனிலிருந்து திரும்பியதும் மலாயாப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராக நியமனம் பெற்ற டாக்டர் சுப்பையா, மொழியியல் ஆராய்ச்சியில் சிறந்து விளங்கினார். 'கிழ்ப்பேராவில் தமிழ் மொழி வழக்கு'—பற்றி இவர் செய்துள்ள ஆய்வு, திசை மொழிகள் வரலாற்றில் குறிப்பிடத்தக்கது.

இவரது Tamil Malaysiana என்ற தொகுப்பு நூல் மலாயாவிலும் சிங்கப்பூரிலும் வெளியான தமிழ் நூல்கள், இதழ்கள் ஆகிய அனைத்து வெளியீட்டையும் பற்றிய விவரமான அட்டவணை.

கோலாலம்பூரில் நடைபெற்ற முதலாவது உலகத் தமிழ் மாநாட்டு ஆய்வுக் கட்டுரையில் அடங்கிய (இரண்டாம்) தொகுதி, டாக்டர் இராம சுப்பையாவின் கைவண்ணம்

பட்ட பதிப்பாகும். அந்த மாநாட்டில் இவர்தான் மொழி பெயர்ப்புச் செயலாளராயும் கண்காட்சித் துறைத் தலைவராயும் விளங்கினார்.

தொல்காப்பியத்தை இவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். பாரதியின் குயில் பாட்டையும் குறுந்தொகையில் நூறு பாடல்களையும் டாக்டர் இராம. சுப்பையா ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். பத்துப் பாட்டில் இவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ள பகுதியை அமெரிக்காவிலுள்ள ஆசியச் சங்கம் (Asia Seciety) வெளியிட முன் வந்துள்ளது.

'இக் காயட் ஸ்ரீ ராம' என்று ராமனின் வரலாற்றை மலாயிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்திருக்கும்இவர் மலாக்கா மன்னர்களின் வரலாற்றை மலாயிலிருந்து தமிழில் தந்துள்ளார்.

'Poetry Singapore' என்ற ஆங்கில ஏட்டின் கூட்டாசிரியர்களுள் ஒருவராகவும் இருந்தார்.

அமெரிக்காவில் பல பல்கலைக் கழகங்களுக்கும் இவர் சென்று வந்துள்ளார். அங்குள்ள மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையைத்தொடங்குவதற்கான திட்டங்கள் தீட்டித்தர, டாக்டர் இராம. சுப்பையாவை அப் பல்கலைக்கழகம் அழைத்திருந்தது. அவ்வழைப்பை ஏற்று அவர் அமெரிக்காவுக்குப் புறப்படுவதற்கு முன்னர் ஒரு பாராட்டு விருந்து நடைபெற்றது. விருந்து முடிந்து வீடு திரும்பும்போது கார் விபத்தில் 25-11-1969 இரவு 37-வயதில் அவர் உயிர் பிரிந்தது.

சிரித்த முகமும், இளமை நலமும் கொண்ட இராம. சுப்பையாவின் மறைவு அவர் குடும்பத்துக்கும்,நகரத்தார் மரபுக்கும், தமிழ் கூறும் நல்லுலகிற்கும் பெருத்த நஷ்டமாகும்.

யுனெஸ்கோ உதவியுடன் சென்னையில் 1971-ல் தொடங்கும் உலகத் தமிழ் நிறுவனத்தில், தென் கிழக்கு ஆசிய நாடுகளில் நகரத்தார் வரலாறு பற்றிய ஆராய்ச்சியும் மேற்கொள்ளப் படவேண்டும் என்றும் அதை வற்புறுத்த வேண்டும் என்றும் அவரும் நானும் விரும்பினோம்.

வணிகத் துறை மட்டுமின்றி எத்துறையிலும் நம் இனத்தவர் உயர முடியும், சிறக்க இயலும் என்பதை நிலை நாட்டியவர் டாக்டர் இராம. சுப்பையா.

நம்மவர் நடத்தும் கல்வி நிலையங்களேயன்றி வெளி நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் திறமையால் உயர் பதவி பெறலாம் என்பதையும், திறமான புலமையெனில் அமெரிக்க நாட்டினரும் நம்மை மதிக்கச் செய்யலாம் என்பதையும் நம் கண் முன்னே வாழ்ந்துகாட்டி உணர்த்தியவர் டாக்டர் இராம. சுப்பையா.

அவர் புகழ் வளர்க!

அவர் வாழ்வும் புகழும் ஏனையோர்க்கு எடுத்துக்காட்டாகத் திகழ்வதாக!



இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழின் வளர்ச்சிக்காகவும் புதிய வகையில் கலைப்பணிகளுக்கு ஆக்கமும், ஆதரவும் பெருகவும் தலைநகரில் கலைவாணி கலைக்கழகம் தொடங்கப்பெற்றுள்ளது.


அந்த மன்றத் தொடக்கவிழா 24-11-69ந் தேதி ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்றது. செட்டிநாட்டு அரசர் உயர்திரு. ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள்.

அவர்கள் பேசியபொழுது கலை வளர்ச்சிக்கு இந்தக் கழகம் பெருந்துணை புரியும் என்று நம்புகிறேன் என்று கூறி வாழ்த்தினார்கள்.

மாண்புமிகு தமிழக அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர் உயர்திரு. கே. வி. சுப்பையா அவர்கள் கலைமன்றத்தினைத் துவக்கி வைத்து உரை நிகழ்த்தினார்கள்.

தென்னிந்திய பிலிம் வர்த்தகச்சபைத் தலைவர் மேன்மைமிகு ஏஎல். சீனிவாசன் அவர்களைத் தலைவராகவும், உயர்திரு பிஎல். பழனியப்பன் அவர்களை துணைத் தலைவராகவும், திரு. ஏ. சேதுராமன் பி. எஸ்ஸி., இராம. சோமசுந்தரம் இருவரையும் செயலாளர்களாகவும் கொண்டு கலைவாணி கலைக் கழகம் துவக்கப்பட்டுள்ளது. அத்தொடக்க விழாவில் சிவகாமி கலைமன்றத்தாரின் 'சொல்லத்தான் நினைக்கிறேன்' நாடகத்தை நடத்திய திரைப்பட நடிகை செல்வி சந்திரகாந்தாவின் கலைத்திறமையைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

செயலாளர் திரு. ஏ. சேதுராமன் அவர்கள் நன்றி கூறுகையில் நவரத்தினங்களின் தூய்மைக்கும் குளிர்ச்சிக்கும் அடையாளமாக விளங்குவது முத்து. அத்தகைய தூயநன்முத்து செந்தமிழ்ப் பாண்டிய நாட்டுக் கடற்கரையில்தான் சிறப்பாக கிடைப்பது. உடலிற்கும் உள்ளத்திற்கும் அணிதந்து நலம் விளைக்கும் முத்தும் முத்தமிழும் செந்தமிழ்ப் பாண்டிய நாட்டிலே சிறப்பாக விளையும் செல்வங்கள்.



செட்டிநாட்டரசர் அவர்கள் தலைமை உரை ஆற்றுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் கே. வி. சுப்பையா அவர்களும், துணைத் தலைவர் திரு. பிஎல். பழனியப்பச் செட்டியார் அவர்களும் வீற்றிருக்கின்றார்கள். செயலாளர் சேதுராமன் அவர்கள் அருகில் நின்றுகொண்டிருக்கின்றார்கள்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த செந்தமிழ்ப் பாண்டியநாடே அண்ணாமலையிடைப் பிறந்த மணியாகிய முத்தையக் கோமான் அவர்களையும், அவர்களுடைய தமிழ்த் தொண்டின் வாயிலாக இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் தந்து தமிழ் மக்களுக்கு ஆக்கம் விளைவிக்கின்றது.

தமிழிசை இயக்கத்தந்தை அண்ணாமலை அரசராகிய தம் தந்தையார் செய்ய எண்ணிய தமிழிசைப் பணிகளையெல்லாம் அவர்தம் மைந்தர் ஆகிய நம் முத்தையாவே ஆர்வமுடன் செய்து வருகிறார்கள்.

அன்னார் இக்கலைக்கழகத்துத் துவக்க விழாவின் தலைவராக அணி செய்வது நமக்கெல்லாம் பெருமை அளிக்கின்றது. நாட்டில் கல்வியும் செல்வமும் தொழில் வளமும் சிறக்க ஆர்வத்துடன் ஆவன புரிந்து வரும் தமிழக அரசின் அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர் உயர்திரு. கே. வி. சுப்பையா அவர்கள் இக்கலைக்கழகத்தினைத் துவக்கி வைத்து உரை நிகழ்த்தியமைக்குக் கலைக்கழகத்தின் சார்பில் நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இரண்டு நாடுகளில் இருபது நாட்கள்

எம். அருணாசலம்

இருபத்து ஆறும் நாளில் என்னுடைய அலுவல் வழக்கத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது.


டாக்டர் ராமகிருஷ்ணன் அவர்களின் உற்ற நண்பர் பெர்லின் நகரில் கண் டாக்டராகப் பணியாற்றும் டாக்டர் கடார் (Godar). இவர்கள் சில ஆண்டுகளுக்கு முன் சென்னைக்கு வந்து கண் மருத்துவத்தில் பயிற்சி பெற்று, அத்துறையில் ஆராய்ச்சிப் பட்டம் பெற்றுச் சென்றவர்கள். அது சமயம் டாக்டர் ராமகிருஷ்ணன் அவர்களுக்கு டாக்டர் கடாரின் தொடர்பு ஏற்பட்டதாம். நாங்கள் சமாதானப் பேரவை மாநாட்டில் கலந்து கொள்வது பற்றி அவர்களுக்கு முன்னதாகவே அறிவித்திருந்ததால் மாநாட்டு நிகழ்ச்சிகளுக்குப் பின் எங்களை டாக்டர் அவர்கள் விருந்திற்குஅழைத்திருந்தார்கள். விருந்திற்கு முன்னதாக, டாக்டர் அவர்கள் பணிபுரியும் மருத்துவ மனைக்கு நாங்கள் சென்றோம். அங்கு ஒவ்வொரு பகுதியாகச் சுற்றிப் பார்த்தபின் டாக்டர் கண் நோய் மருத்துவம் பற்றி எங்களுக்கு விளக்கிக் கூறினார்கள். அங்கு நோயாளிகளைப் பலர் பரிசோதித்து அப்படியே பலரும் கலந்து மருத்துவமுறை பற்றித் தீர்மானித்து அதன்படியே சிகிச்சை அளிக்கப் படுகிறது. இதனை நாங்கள் நேரிலேயே காணும் வாய்ப்புக் கிடைத்தது. நோய் பற்றிய முழு விபரங்களும் சேகரிக்கப்பட்டு அது என்ன நோய் என்பதனைப் பலரும் அறிந்த பின்பு அந்நோயாளிக்குச் சிகிச்சை அளிக்கப் படுகிறதென்றும் கூறினார்கள். இதன் மூலம் நோய் பற்றிக் கண்டுபிடிப்பதில் தவறு நேரா வண்ணம் தவிர்க்கப் படுகிறதென்று அறிந்தோம். மருத்துவ வசதிகளுக்கு வருமானத்திற்கு ஏற்றவாறு பணம் வாங்குவது அங்கு வழக்கத்திலிருந்து வருகிறது.

பிறகு டாக்டர் அவர்களின் இல்லத்திற்குச் சென்றோம். விருந்திற்குப் பின் நிகழ்ந்த உரையாடலில் டாக்டர் அவர்களின் வாழ்க்கை பற்றியும், ஜெர்மன் மக்களின் வாழ்க்கைத் தரம் பற்றியும் ஓரளவு அறிந்தோம். டாக்டரின் வருமானத்தோடு இல்லத்தரசியின் வருமானமும் வருவதால் குடும்பச் சுமை இல்லாமலிருப்பதாகவும் பல ஆண்டுகளாகச் சேமித்த பணத்திலிருந்து சமீபத்தில் கார் வாங்கியிருப்பதாகவும் கூறினார்கள். டாக்டர்களானாலும் இங்குள்ளது போல் அங்குப் பெருத்த வருமானங்கள் எதிர்பார்க்க இயலாதென்றும் எல்லோரும் மருத்துவமனைகளில்தான் பணியாற்றவேண்டுமென்றும் கூறினார்கள். ஜெர்மன் மக்களின்


வாழ்க்கைபற்றிய பல விவரங்களை அறிந்து கொண்ட மகிழ்ச்சியில் டாக்டர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடை பெற்ரும். அவ்விபரங்கள் பற்றிப் பின்னர் கூறுகிறேன்.

எங்கள் குழுவிற்கு ஜெர்மன் மொழியிலிருந்து ஆங்கிலத்தில் விளக்கிச் சொல்லும் மொழி பெயர்ப்பாளராக அனிதா (Anita) ஜாக் பிர்ஜித் (Jock Birgit) கிரிஸ்டல் (Christel) என்னும் மூவர் உதவினர். அனிதா ஒரு கல்லூரி மாணவி. ஜாக் ஒரு அலுவலகப் பணியாளர். கிரிஸ்டல் ஒரு குடும்பப் பெண். அவர்களுள் பலநாள் எங்களுக்கு மொழி பெயர்ப்பாளராக விளங்கியவர் அனிதாவாகும். அவர்களுக்கு நம் பெண்கள் அணியும் சேலை மீது அலாதி மோகம் ஏற்பட்டு அது பற்றி எங்களிடம் வினவினுர்கள். அவர்களுடைய ஆவலைத் தீர்த்து வைக்க நாங்கள் படாத பாடுபட வேண்டியதாயிற்று நம் குழுவிலுள்ள பெண்களிடம் சாமர்த்தியமாகச் சொல்லி ஒரு சேலையினைப் பெற்றது பெரும் பாடல்ல. அதனை அணியும் முறையினைக் கூறி அனிதா அவர்களை அணியச் செய்ய நாங்கள் பட்டபாடு விவரிக்க இயலாததாகும். ஆனுல் எங்கள் முயற்சி வெற்றி பெற்றதா இல்லையா என்பதனை இங்கு இடம் பெற்றிருக்கும் அனிதா அவர்கள் டாக்டர் அவர்களுடன் இருக்கும் படத்தைப் பார்த்துத் தாங்களே தீர்ப்புக் கூறுங்கள்.

இந்த அனுபவத்தினை (அருகில் உள்ள டாக்டர் ராமகிருஷ்ணன், அனிதா புடவை கட்டியுள்ள புகைப் படம்) எங்களால் மறக்க முடியுமா ?



பேரவைக் கூட்டத்திற்குப் பின் ஒருநாள் நான் என் அறையில் சற்று ஒய்வாக இருந்தேன். அப்போது அங்கிருந்த அனிதா எனக்குத் திருமணம் நிச்சயமாகி இருக்கிறதா எனக் கேட்டவுடன் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஏன், எதற்காக இந்தக் கேள்வி என்று எனக்குப் புரியவில்லை. என் மனதில் ஏதேதோ எண்ண அலைகள் ! உண்மையைச் சொல்லவும் சிறிது அச்சம். ஏன் இந்தக் கேள்வி என்று தெரியாமல் பதில் கூறவும் தயக்கம். ஒரு வழியாக மனதைத் திடப்படுத்திக் கொண்டு ஏன் இந்தத் திடீர் கேள்வி என்றேன். அதற்கு அவர்கள் கூறிய பதில் உண்மையிலேயே அம்மக்களின் கட்டுப்பாட்டினையும் பண்பாட்டினையும்



பேரவைக் கூட்டத்திற்கு வந்திருந்த நண்பர்களுடன்
கட்டுரை ஆசிரியர்.

சொல்லாமல் சொல்லியது. நான் என்றும் மோதிரம் அணியும் வழக்கம் உள்ளவன். ஆகையால் ஜெர்மனிக்குச் செல்லும்போதும் மோதிரம் என் கைக்கு அணி செய்தது. அந்த அடையாளத்தைக் கொண்டே என்னை அக்கேள்வி கேட்டதாகவும் நான் கை விரலில் மோதிரம் அணிந்துள்ளதால் எனக்கு நிச்சயதார்த்தம் ஆகியிருக்கிறதா என்று எண்ணியதாகவும் கூறினார்கள். நான் ஒரு அப்பா என்று கூறியதும் அவர்களுக்கு ஒரே ஆச்சரியம். என் மீது சந்தேகம் கூடத் தோன்றிவிட்டது. எப்படி நிச்சயதார்த்தம் ஆகித்திருமணம் ஆகாமலே ஓர் அப்பா ஆனீர்கள் என்ற அசட்டுத்தனமான ஒரு கேள்வியைக் கேட்டு என் மீது ஒரு சந்தேகப் பார்வை ஒன்றை உதிர்த்தார்கள். யார் சொன்னது எனக்குத் திருமணம் ஆகவில்லை என்று. எனக்குத் திருமணமாகி குழந்தையும் உண்டென்று சற்றுக் கோபமாகக் கூறினேன். பிறகு ஏன் இடது கைவிரலில் மோதிரம் அணிந்திருக்கிறீர்கள். திருமணமானால் வலதுகை விரலில் அல்லவா மோதிரம் அணிவது வழக்கம் என்றார்களே பார்க்கலாம். அப்போதுதான் எனக்கு அவர்கள் கேட்ட கேள்வியின் தன்மை புரிந்தது. எங்கள் சமுகத்தில் எப்போதும் ஆணும், பெண்ணும் இடது கைவிரல்களில் தான் மோதிரம் அணியும் வழக்கம் என்று விளக்கிக் கூறினேன். அந் நாட்டில் திருமணம் நிச்சயமான ஆணும் பெண்ணும் இடது கை விரலில் மோதிரம் அணிந்து, திருமணம் ஆனபின் வலது கை விரலில் மோதிரம் மாற்றி அணிவது வழக்கம் என்றும், இதிலிருந்து ஒருவனுக்குத் திருமணம் நிச்சயம் ஆகியிருக்கிறதா அல்லது ஆகிவிட்டதா என்ப

தனைத் தெரிந்து கொள்ளலா மென்றும், இதனை அந் நாட்டில் எல்லோரும் கடைப்பிடித்து வருவதாகவும் கூறினார்கள். மேலும் தனக்கு நிச்சயதார்த்தம் ஆகியிருக்கிறதென்றும் கூறிஅவர் களின் இடக்கை விரலை அணி செய்த தங்க வளையம் போன்ற மோதிரத்தைக் காட்டினார்கள். சற்று நேரத்தில் எனக்கு ஓர் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்து விட்டீர்களே என்று அனிதா அவர்களிடம் கூறி அதனை எண்ணி நகைத்தேன். இதனை என்னால் மறக்க முடியுமோ ? இந் நிகழ்ச்சி அந் நாட்டு மக்களின் ஒழுக்கத்தினையும், கட்டுப்பாட்டினையும், பண்பாட்டினையும் சொல்லாமல் சொல்ல வில்லையா ? ★

கீரைகளின் பலன்கள்

ஆரைக்கீரை :	நீரிழிவுக்காரர்களுக்கு ஏற்ற கீரை இது.
இலைக்கோசு :	நேத்திரக் கோளாற்றை நீக்கும்.
அகத்திக் கீரை :	நீர்ச்சளியைப் போக்கும்.
கரிசலாங்கண்ணிக் கீரை :	கையாந்தகரை என்று சொல்லப்படும் இந்த இலையை வாயில் போட்டு மென்று பல்லினைத் தேய்க்க பல் சம்பந்தமான வியாதிகள் போகும்.
கலவைக்கீரை :	குடல் வாதத்தைப் போக்கும்.
கறிவேப்பிலை :	இரத்த சுத்திக் கேற்றது.
குத்துவசளை :	நீர்க்கடுப்பு நீக்கும்.
கொத்தமல்லிக் கீரை :	உறக்கத்திற்கும் இந்திரிய ஊக்கத்திற்கும் நல்லது.
கொடிக்காசரைக்கீரை:	தாது பலத்தைக் கொடுக்கும்.
சல்லாத்துக் கீரை :	ஈரலுக்குப் பலத்தைக் கொடுக்கும்.
சிறு கீரை :	காச நோயுள்ளவர்கள் தினசரி உணவில் இதை உட்கொள்ள வேண்டும்.
சிறு பசளைக் கீரை :	வெள்ளை நோயுள்ளவர்கள் தினமும் ஒருவேளை இந்தச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.
சுக்காங் கீரை :	உடல் வெப்பத்தைத் தணிக்கும்.
சேம்பிலை :	மூல வியாதிக்குகந்த கீரை இது.
சோலிக் கீரை :	சூதகச் சிக்கலையும் நீக்கும்.
செடிப் பசலை :	குடற் சுத்திக்கும் வெகுவாக உதவுகிறது.
துத்தி இலை :	மூலாதாரத்திலுள்ள வாயுவைக் கண்டிக்கும்.
தூதுளைக் கீரை :	இக்கீரை வாத கபங்களையும் போக்கும்.
பண்ணைக் கீரை :	கரப்பான், கிரந்தி, இரணம் முதலியவைகளை நீக்கும்.
பருப்புக் கீரை :	கல்லீரல் வியாதியைக் கண்டிக்கும்.
பாற்சொறிக் கீரை :	வயிற்றுப் புண்களை ஆற்றும்.

பிண்ணுக்குக் கீரை :	சீதபேதி, இரத்த பேதியைத் தடுக்கும்.
புதினக் கீரை :	புதினச் சட்னி அசீரணத்தைப் போக்கும்.
புளிச்சக் கீரை :	ஆட்டிறைச்சியுடன் புளிச்சக்கீரையைச் சேர்த்து பாகப்படுத்தி உண்டால் பித்தம் அடங்கும்.
புளியாரைக் கீரை :	சரும வியாதிகளைப் போக்கும்.
பொடுதலை :	நெய்யமுதத்துடன் சேர்த்துச் சாப்பிட இருமல் நீங்கும்.
பொன்னுங்கண்ணி :	இதனை உண்டவர்களின் மேனி பொன்னிறமடையும் என்பதால் 'பொன்—ஆம்—காண்—ணீ' என்று சொல்லப்படுகிறது.
மணத்தக்காளிக் கீரை:	வாய்ப் புண்களை ஆற்றும்.
முருங்கைக் கீரை :	கண்பார்வையை அதிகரிக்கும்.
முளைக்கீரை :	நரையைத் தடுத்து நல்லபசி உண்டாக்க வல்லது.
முள்ளங்கி இலை :	மதுமேக வியாதியஸ்தர்களுக்கேற்றது இது.
வல்லாரைக் கீரை :	அண்ட வீக்கத்தைப் போக்கும்.
வள்ளைக் கீரை :	பிரசவித்த பெண்களுக்குப் பால் சுரப்பு உண்டாகும்.
வெந்தயக் கீரை :	மார்பு வலிக்கும், இடுப்பு வலிக்கும் ஏற்றது இக்கீரை.

இணைந்த வேந்தர்கள்

பெறுவதற்கரிய நல் வாய்ப்புக்கள் வாழ்க்கையில் சிலருக்குத் தான் கிடைக்கும். அத்தகைய நல்வாய்ப்பினை நம் செட்டிநாட்டரசரின் குடும்பத்தார் பெற்றூர்கள். ஆம், டாக்டர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் தாம் தோற்றுவித்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இணைவேந்தராக இருந்தபோது, அவரது மூத்த குமாரர் சென்னை நகரத்தில் முதல் மேயராகத் திகழ்ந்த நம் முத்தையா செட்டியார் அவர்கள் 1936-37ல் பொப்பிலி அரசரின் அமைச்சரவையில் முக்கியமான பொறுப்பினை ஏற்றுக் கல்வி மந்திரியாகிச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு இணைவேந்தராக விளங்கினார்கள். இவ்வாறு தந்தையும் மகனும் ஒரே காலத்தில் தமிழ் நாட்டில் (அப்போது) இருந்த பல்கலைக் கழகங்களுக்கு இணைவேந்தர்களாக இருந்தது பெருமைமிக்கது தானே ?

தகவல் : ஏ. ஆர். மணி
ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா,
காரைக்குடி-1.



'இராமநாதனும் சீதையும் எதற்கும் தயங்கமாட்டார்களே, காசி விசயத்தில் ஏன் இப்படித் தயங்குகிறார்கள்' என்று அருணாசல ஐயா நினைத்தார்கள்.

''இராமையா, என்ன இப்படிப் பெரிசா யோசிக்கிறே? மனசுலே இருக்கிறதைச் சொன்னாத்தானே தெரியும்? நாம தகப்பன் பிள்ளை மாதிரி, நமக்குள்ளே எதையும் சொல்லிக்கலாம். சும்மா சொல்லு'' என்று அவர்கள் கேட்டார்கள்.

காலம், இரவாகிப் பகலாகிக் கரைந்துகொண்டிருந்தாலும் அதன் வேகத்தில் நடந்த நிகழ்ச்சிகள் கரைந்து விடுவதில்லை; மறைந்துவிடுவதில்லை. மறக்கவும் முடிவதில்லை.

வேனிற் காலத்தில் வேம்பின் இலையும் உதிர்கிறது. பூவும் உதிர்கிறது, ஆனால், இலையைப் பெருக்கித் தள்ளிவிடுகிற நாம், பித்தத்தைப் போக்கும் பெருமருந்து என்பதால் பூவைப் போற்றி அள்ளி வைத்துக் கொள்கிறோம். வாழ்க்கையில் நடந்த இன்றியமையாத நிகழ்ச்சிகளும் வேப்பம் பூவைப் போன்றவைதாம். இன்னும் சொல்லப் போனால் அவற்றில் வெறுக்கத் தக்க கசப்பும் விரும்பத் தக்க குணமும் இருக்கலாம். எனவே அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை நம்மால் மறக்க முடிவதில்லை என்பதோடு நாமே அவற்றை அவசியம் ஏற்படும் பொழுதெல்லாம் நினைத்துக் கொள்கிறோம்.

அருணாசல ஐயா மனம் விட்டுக் கூறும்படி இராமநாதன் செட்டியாரைப் பார்த்துக் கூறிய பொழுது, தம் தம்பி காசிக்குத் தம் செட்டியாரை வட்டிக்கடை வைத்துக் கொடுக்கச் சொன்னதிலிருந்து மேற்படியான் பெட்டகத்துச் சாவியை விட்டெறிந்தது வரை உள்ள நிகழ்ச்சிகள் சீதை ஆச்சி உள்ளத்திலே பவனி வந்தன. அவர்கள் அவற்றையெல்லாம் சுருக்கமாகவும் அதே சமயத்தில் மிகத் தெளிவாகவும் அருணாசல ஐயாவிடம் கூறினார்கள். அப்படிப்பட்டவனுக்குக் கல்யாணம் சொன்னால் அவன் ஒழுங்கானவன் என்று நாம் ஒப்புக்

கொண்டதாக ஆகிவிடும், என்பதையும் குறிப்பிட்டார்கள்.

சிறிது நேரம் அருணாசல ஐயா மௌனமாக இருந்தார்கள்.

சீதை பிடிவாதமாகப் பேசுவதாக ஐயா நினைத்து விட்டார்களோ என்று இராமநாதன் செட்டியார் நினைத்தார்கள்.

''ஐயா, சீதை சொன்னதைப் பத்தி பெரிசா ஒண்ணும் நினைக்காதீங்க. நாங்க உங்க புள்ளைக மாதிரி. உங்க மனசிலே உள்ளதைச் சொல்லுங்க.'' என்று அவர்கள் கேட்டார்கள்.

''மனசிலே உள்ளதைச் சொல்றது என்ன, ராமையா, நீ கொடுத்து வச்ச புள்ளை'', என்று கூறி ஐயா நிறுத்தினார்கள்.

அவர்கள் எதைப் பற்றிச் சொல்கிறார்கள் என்பது தெரியாது இராமநாதன் செட்டியாரும் சீதை ஆச்சியும் ஐயாவைப் பார்த்தார்கள்.

''ராமையா, நான் சீதையைப் பத்திதான் சொல்றேன், அவ ரொம்ப சமத்து, நல்ல நேரம் வந்துட்டா பணம் வந்துடும். ஆனா, குணம் வராது, பணம் பந்தியிலே குணம் குப்பையிலேன்னு சாதாரணமாச் சொல்லுங்க. குப்பையிலே கிடந்தாலும் மாணிக்கம் மாணிக்கம்தானே? உன் சம்சாரம் பந்தியிலே இருக்கிற மாணிக்கம் மாதிரி. பணம் கெடைக்கிறதுக்கு மனுசனுக்கு அதிட்டம் இருந்தாப் போதும், ஆனா நல்ல பெண்சாதி கிடைக்கிறதுக்கு அவன் புண்ணியம் பண்ணியிருக்கணும். அதிகமாச் சொல்லுவானேன், நீ புண்ணியம் பண்ணினவன், குற்றம் பார்த்தா சுற்றம் இல்லேன்னு சொல்லுங்க. குற்றத்தைப் பார்க்காம இருக்கலாம். அதுக்காக நியாயத்தைப் பார்க்காம இருக்க முடியுமா? சுற்றத்தைப் பார்த்து நியாயத்தை விட்டுடப் படாது. நெல்லுக்குப் போற தண்ணி புல்லுக்குக் கொஞ்சம் பாயலாம், நெல்லுக்குப் போறதையே அடைச்சிட்டு புல்லுக்குத் தண்ணி பாய்ச்சலாமா? முதலை வச்சித் தொழில் நடத்துன்னா, லாபத்தை எடுத்துக்கலாம். முதலையேவா எடுத்துக்கிறது? காசிப் பய இருக்கானே, அவன் ஒரு மாதிரி பயதான். எதையும் கூட்டிக் குறைச்சே பேசுவான், சாதாரண விஷயத்துக்குக்கூட, ரெண்டு பொய்யைச் சொல்லி வைக்கிறதிலே அந்தப் பயலுக்கு ரொம்பச் சந்தோஷம். என்ன இருந்தாலும் அவன் இப்படி மோசக்காரப் பயலா இருப்பான்னு நான் நினைக்கலே, என்று கூறிய அருணாசல ஐயா, சிறிது நேரம் தம் பேச்சை நிறுத்தினார்கள்.

சீதை ஆச்சியின் கண்களில் முட்டி நின்ற நீர் முத்துக்கள் கீழே உதிர்ந்தன. ஐயாவின் பேச்சைக்

கேட்டு இராமநாதன் செட்டியாரின் உள்ளம் பெருமிதத்தால் நிறைந்தது.

"ராமையா, எனக்கொண்ணு தோணுது..." என்று அருணசல ஐயா சொன்னர்கள்.

"என்ன?" என்று இராமநாதன் செட்டியார் ஆர்வத்தோடு கேட்டார்கள்.

ஐயா சொல்வதைச் சீதை ஆச்சி ஆர்வத்தோடு கேட்க முற்பட்டார்கள்.

"காசி நல்லவனே கெட்டவனே நாம அவனைப் புறக்கணிச்சம்னு வேண்டாம். அதே சமயத்திலே நம்மை மதிக்காதவனை மதிக்கிறதும் எனக்குக் கொஞ்சம்கூடப் பிடித்தம் இல்லே. அதனலே, ஒரு நாளைக்குக் காசிகிட்டே இது சம்பந்தமா தூது போகலாம்னு இருக்கேன்.

ஐயா இப்படிச் சொன்னதும் சீதை ஆச்சி குறுநகை புரிந்தார்கள். இராமநாதன் செட்டியார் பெரிதாகவே சிரித்துவிட்டார்கள்.

"வேறே என்ன பண்றது? நம்ம ஆளுகளிலேயே சில பேருக்கு ஊரு வம்பு பேசறதே பொழப்பு. அதனலே காசி கல்யாணத்துக்கு வரலேங்கிறதை வச்சிக்கிட்டுப் பெரிய கதையே பண்ணிடுவாங்க. போயி, காசியைத் தனியா கூப்பிட்டு 'உங்க அத்தானைப் பார்த்து' ஏதோ நடந்தது நடந்து போச்சு. அதையெல்லாம் மனசிலே வச்சுக்காதிங்க சொல்லிடு அப்படீன்னு சொல்லிப் பார்ப்போம். கேட்டு வந்தான்ன நீங்க கல்யாணம் சொல்லுங்க. இல்லேன்ன விட்டுடுங்க. வைர ஊசின்ன, கண்ணுல குத்திக்கிற முடியுமா?" என்று ஐயா கேட்டார்.

"ஐயா, இது நல்ல யோசனைதான். ஏதோ பாண்டவருக்காகத் தூது போன கண்ணன் மாதிரி எங்களுக்காக நீங்க போயிட்டு வாங்க" என்று இராமநாதன் செட்டியார் கூறினர்கள்.

"என்னப்பா ராமையா, பேச்சோடே பேச்சா, காசிப் பயலைத் துரியோதனன்னு சொல்லிட்டயே" என்று கூறிய ஐயா அவர்கள் கலகல என்று சிரித்தார்கள்.

இராமநாதன் செட்டியாரும் சீதை ஆச்சியும்கூட அந்தச் சிரிப்பிலே கலந்து கொண்டார்கள்.

"ஐயா, உங்க குணம் எங்களுக்கு நல்லாத் தெரியும். எதிலேயும் கரூரா இருப்பீக. ஏதோ எங்க

மேலே இருக்கிற பாசத்தினுலே இதுக்குப் போறேன்னு சொல்றிய. அதை இன்னிக்கே போய்த்து வந்திருங்களேன்'', என்று இராமநாதன் செட்டியார் கூறினுர்கள்.

''அதுக்கென்ன, போய்ட்டு வந்துட்டா போச்சு'' என்று ஐயா சொன்னுர்கள்.

பகலுணவுக்கு மேல் அருணுசல ஐயா, இராமநாதன் செட்டியார் வீட்டுக் காரில் தஞ்சாவூருக்குப் புறப்பட்டார்கள்.

அந்தப் புதிய அம்பாஸிடர் கார் சோழனுடைய பழைய தலைநகரை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. காலத்தின் வேகத்தில் தேர்கள் மறைந்து கார்கள் வந்துவிட்டன. ஆனல், மனித இனத்தில் எவ்வாறே புகுந்துவிட்ட போட்டியும் பொருமையும் வஞ்சமும் சூதும் மாறவில்லையே மாறவில்லையே என்று எண்ணுவது போலக் கார் விரைந்து சென்றுகொண்டிருந்தது.

காரை ஓட்டிக் கொண்டிருந்த கண்ணுயிரம் கடந்த இருபது ஆண்டுகளாக இராமநாதன் செட்டியாரிடம் பணியாற்றி வருகிருன். பதினைந்து வயதில் பணியாற்ற அவன் வந்த போது, மேல் வேலைகளைப் பார்ப்பதற்காக என்று வந்து சேர்ந்தான். அவனுடைய அடக்கமும் பணிவும் நம்பிக்கையும் விரைவிலேயே அவனை டிரைவராக மாற்றின. இரண்டு முறை அவன் செட்டியார் கூட மலேசிய நாட்டிற்கும் போய்வந்திருக்கிருன்.

''என்ன கண்ணுயிரம், சௌக்கியமா இருக்கியா?'' என்று ஐயா பேச்சைத் தொடங்கினுர்கள்.

''சௌக்கியமாத்தான் ஐயா இருக்கேன். நம்ம செட்டியார் கிட்டே இருக்கிறபோது சௌக்கியத்துக்கு என்னங்க ஐயா குறைச்சல்!'' என்று கூறிய அவன் ஒரு கணம் யோசித்துவிட்டு, ''செட்டியார் சொல்ருங்க, அதிலேயும் நீங்க வர்றிங்க, அப்படீங்கிறதினுலேதான் நான் இன்னிக்குக் காசி செட்டியார் வீட்டுக்கு வாரேன். அந்த மனுஷன் குடியிருக்கிற வீதியிலே கூட மிதிக்கப்படாதுங்க. நம்ம செட்டியாரு ஒரு காசுக்கு ஆசைப்பட்டதில்லே. அப்படிப் பட்டவங்க வீட்டுப் பணத்தை இந்த மனுஷன் இப்படிச் சாப்பிட்டுட்டாருங்களே!'' என்று கண்ணுயிரம் நாத் தழதழக்கக் கூறினுன். அவனுடைய கண்களில் நீர் சுரந்தது.

''நம்ம செட்டியாரைப் போல அடுத்தவங்க கஷ்டத்தை உணர்றவங்க ரொம்ப பேரு இருக்க முடியாது ஐயா. நான் இவுங்கிட்டே வந்து வேலைக்குச்

சேர்ற போது, வீட்டிலேயே சாப்பிட்டுக்கிட்டு இருக்கும் படியாச் சொல்லி, அஞ்சு ரூபா சம்பளம் கொடுத்தாங்க. நான் ரெண்டு வருஷத்திலேயே டிரைவரா ஆயிட்டேன். உடனே, சம்பளத்தை முப்பது ரூபாயா மாத்திணுங்க. 'நான், உங்க வீட்டிலே தானே சாப்பிட்டுக்கிட்டு இருக்கேன். எனக்கு எதுக்குங்க இம்புட்டுச் சம்பளம்' அப்படின்னு நான் கேட்டேன். 'வேலைக்குத் தகுந்த சம்பளம் கொடுக்கணும். அப்பத்தான் வேலைக்காரங்க மன நிறைவோட வேலை பார்க்க முடியும். அதோட ஒன்னை நம்பி ரெண்டு பேர் இருக்காங்க. அதனாலே உன் செலவுக்குப் போக, பாக்கியை உன் அப்பா அம்மாவுக்கு அனுப்பிச்சிடு, அப்படின்னு சொன்னுங்க. அப்புறம் ரெண்டு மூனு வருஷம் கழிச்சு எனக்குக் கல்யாணம் ஆச்சு. கல்யாணச் செலவுக்ுன்னு ஆயிரம் ரூபா குடுத்தாங்க. அதோட, தோட்டத்திலேயே ஒரு சின்ன வீடு கட்டிக் குடுத்தாங்க. அந்தக் காலத்திலேயே சம்பளத்தை நூறு ரூபாயா மாத்திணுங்க. அவ்வளவு பெரிய மனசு அவங்க மனசு. ஐயா, இதெல்லாம் நான் எதுக்காகச் சொல்றேன்னு, நான் டிரைவர், எனக்கே இம்புட்டு உபகாரம் பண்ணினவங்க சொந்த மச்சினனுக்குப் பண்ண மாட்டாகளா? எனக்குத் தெரிய இந்தக் காசிச் செட்டியாருக்குச் செலவுக்குன்னு எவ்வளவோ பணம் கொடுத்திருக்காங்க,'' என்று கூறிக்கொண்டு வந்த கண்ணயிரம் மிகுந்த உணர்ச்சிக்கு ஆளானதால் பேச்சை நிறுத்தினுன்.

''என்ன இருந்தாலும் ராமையா காசியைச் சும்மா விட்டிருக்கப் படாது அளவுக்கு மீறிப் பெருந்தன்மையா இருந்தாலும் இந்தக் காலத்துக்கு ஒத்து வரலையேப்பா'' என்று ஐயா சொன்னுர்கள்.

''பெருந்தன்மையானவங்க தான். அதுக்காக எந்த வகையிலேயும் அவுங்க ஏமாந்தவங்க இல்லை ஐயா. அவுக கூட நான் மலேயாவுக்குப் போனபோது, அங்கே ஒண்ணு நடந்ததுங்க. அதை என்னுலே இன்னிக்கும் மறக்க முடியலே. ஒருநா நம்ம செட்டியாருக்குத் தெரிந்த ஆசாமிக்காரர் ஒருத்தர் வந்து ஒரு ஐயாயிரம் வெள்ளி பணம் கொடுங்க; நாளைக்குக் கொண்டு வந்து தர்ரேன்னு கேட்டாரு. உடனே நம்ம செட்டியாரு, அவருக்கு ஐயாயிரம் வெள்ளி பணம் குடுத்தாங்க. லெட்டர் எழுதித் தந்துட்டுப் போறென்னு அவர் சொன்னதுக்கு, நாளைக்குத்தான் தந்திடறதாச் சொல்றீங்களே லெட்டர் என்னத்துக்கு? கொண்டுகிட்டுப் போங்க. அப்படின்னு நம்ம செட்டியார் சொன்னுங்க. ஒரு நாள் ஆச்சு, ரெண்டு நாள் ஆச்சு, பத்து நாள் ஆச்சு, அந்த ஆளு பணங் குடுத்துவிடலே. வேறே வேலையா வெளியிலே போன நம்ம செட்டியார்,

அவர் வீட்டுக்குப் போய், வாங்கிட்டு வந்த பணத்தைக் குடுத்துவிடலையே அப்படின்னு கேட்டாங்க. உங்க கிட்டே எங்கேங்க நான் பணம் வாங்கினேன் அப்படின்னு அந்த ஆள் சொல்லிட்டாரு. அதுக்கு மேலே செட்டியார் அந்த ஆளுகிட்டே ஒரு வார்த்தை பேசலே. அங்கிருந்து வந்தவங்க நேரா போலீஸ் ஸ்டேஷன்லே போய் ரிப்போர்ட் குடுத்தாங்க. போலீஸ்காரங்க போய் விசாரிச்ச போது, அந்த ஆசாமிக்காரரு, நம்ம செட்டியாரு கருப்பா வெள்ளையான்னு கூட எனக்குத் தெரியாதுன்னு சொல்லிட்டாரு. அந்த ஆளு, நம்ம செட்டியார் கிட்டே பணம் வாங்க வர்றபோது, அவ வீட்டுக் கைபிடி துண்டை மறந்த வாக்கிலே வச்சிட்டுப் போயிட்டாரு. என்னைத் தெரியாதுன்னு சொன்னவர் வீட்டுத் துண்டு என் பங்களாவுக்கு எப்படி வந்தது? அப்படீங்கிறதையே காரணமா வச்சு பன்னிரண்டு மணி நேரத்திலே அந்த ஆளுகிட்டே யிருந்து, நம்ம செட்டியாரு பணத்தை வாங்கினுங்க'' என்று உருக்கத்தோடு கண்ணுயிரம் கூறினன்.

அப்படிப்பட்ட ஆளு, இவனை ஏன் இழவு இப்படி விட்டுட்டான் என்று அருணசல ஐயா கேட்டார்கள்.

அதைப்பத்தி, நானும் செட்டியாரும் ஒருநா புதுக்கோட்டைக்குப் போய்க்கிட்டு இருக்கிறபோது கேட்டேன் ஐயா. அப்ப அவங்க சொன்னுங்க, காசிக் கிட்டே யிருந்து பணத்தை வசூல் பண்றதுக்கு எவ்வளவு நேரம்டா ஆகும்? காசிக்குப் பணம் குடுத்துக் கடை ஆரம்பிக்கச் சொன்னதே நம்ம ஆச்சி. அப்படி நாம சொல்லிப் பணம் போச்சுன்னு இப்பவே கவலைப் பட்டுக்கிட்டு இருக்கா. அந்தப் பய மேலே கேசைப் போட்டு கோர்ட்டிலே நிறுத்தி, அவன் ஒழுங்கா முறையா பணத்தைக் கட்டலேன்ன, வாரண்டு ஜப்தின்னு கொண்டுபோயி பணத்தை வசூல் பண்ண னும். அந்த மாதிரி நிலைமை ஏற்பட்டா ஆச்சி பெருங் கவலைக்கு ஆளாயிடுவாடா. பணம் போன சம்பாதிச்சுக்கலாம். ஆச்சி போன என்னடா செய்யறது? நம்ம பணமா இருந்தா வருது, இல்லேன்ன போவுது அப்படீன்னு சொல்லிட்டாங்க.

கண்ணுயிரத்தின் பேச்சில் உருக்கம் நிறைந்திருப்பதை ஐயா கண்டார்கள்.

தஞ்சை நகரை நோக்கிக் கார் பறந்து கொண்டிருந்தது.

(தொடரும்)

நமது சங்கங்கள்

வெ. கண்ணன், பி.ஏ.,பி.எல்.

நமது நகரத்தார் சங்கங்கள் யாவும் பொது மக்களுக்கும் சிறப்பாக நமது சமூகத்தினருக்கும் உதவிகள் புரியும் நோக்கங்களைக் கொண்டு இயங்கி வருகின்றன. சங்கங்களின் பொது நோக்கங்கள் நிதி வசதிக் குறைவான காரணத்தால், கல்வி அறிவு பெற இயலாத நிலையில் இருக்கும் குடும்பத்தின் குழந்தைகளுக்கும், திருமணமாக வேண்டிய வயது வந்த பெண்களின் திருமணத்திற்கும் நிதி உதவி அளிப்பதும், மற்றும் மருத்துவ உதவிகள் செய்தல், மருத்துவ மனைகள், கல்விக் கூடங்கள் நிறுவுதல் ஆகியவைகளாகும்.

இந்த நோக்கங்களில் கல்வி உதவி அளிப்பதையும், திருமணத்திற்கு நிதி உதவி செய்வதையும், சென்னை, திருச்சி, சேலம், மதுரை, கோவை ஆகிய நகரங்களில் நடந்துவரும் நகரத்தார் சங்கங்கள் சென்னையில் இயங்கிவரும் நகரத்தார் மாணவர் சங்கம் முதலியவைகள் செய்து வருகின்றன. இவ்வுதவிகளை பொள்ளாச்சியில் உள்ள நகரத்தார் பெருமக்களும் செய்து வருகின்றனர். தற்சமயம் இவ்வுதவிகளை மேலும் செய்வதற்கு சமீபத்தில் ஆரம்பிக்கப் பெற்றிருக்கும் தென்னாற்காடு மாவட்ட நகரத்தார் சங்கமும் முன் வந்திருக்கிறது.

இச்சங்கங்கள் யாவும் கல்வி உதவி அளிப்பதற்கு ஒரே மாதிரியான குறிப்பிட்ட விதி முறைகளை அனுசரித்து வருகின்றன. உதவி வேண்டுபவர்கள் குறிப்பிட்ட காலத்தில் சங்கங்களில் கிடைக்கும் விண்ணப்பத் தாள்களில் தாங்கள் கடைசியாக எழுதிய தேர்வுகளில் பெற்றிருக்கும் மதிப்பெண்களையும்,மாணவனின் குடும்பத்தினரின் வருவாய் முதலியவைகளையும் குறித்து சமூகப் பெரியோர்களிடம் சான்றும் பெற்று அனுப்பி வைக்க வேண்டும். சங்கங்களில் கல்விக் குழுவிண்ணப்பங்களை பரிசீலித்து ஒவ்வொரு ஆண்டுக்கும் சங்கங்கள் ஒதுக்கும் நிதி அளவிற்கேற்ப மாணவர்களுக்கு உதவி செய்கின்றன.

"நகரத்தார் ஐக்கிய சங்கம்" மேற்குறிப்பிட்ட முக்கிய நோக்கங்களை மையமாகக் கொண்டு

பல நகரங்களில் இயங்கி வரும் சங்கங்களின் ஒன்றிப்பாக சென்னை பவளக்காரத் தெருவில் உள்ள ''இரங்கூன் நகர விடுதி'' யில் இயங்கிவருகிறது.

திருமண உதவிகள் பெற ஒவ்வொரு சங்கங்களும் குறிப்பிட்ட விதி முறைகளைப் பின்பற்றுகின்றன என்று சொல்ல முடியவில்லை. சங்கங்களின் நிதி வசதிகளை அனுசரித்தும் நிதி உதவி வேண்டுவோரின் வசதிகளைப் பொறுத்தும் உதவிகள் அளிக்கப் படுகின்றது.

சென்னை நகரத்தார் சங்கத்திலிருந்து மாணவர்களுக்கு கல்லூரிப் படிப்புகளுக்கு உதவுவதுடன் இளஞ்சிறுர்களுக்கு கல்வி நிலையங்களுக்கு கட்டண மேதுமில்லாவிடினும் வீட்டில் குழந்தைகளை வைத்துப் பராமரிக்க முடியாத நிலையில் இருக்கும் குடும்பங்களுக்கு உதவுவதாக இருக்கும் பொருட்டு காலஞ் சென்ற பெருந்தகை உயர்திரு. மு. சோம. அவர்கள் முயற்சியில் இருபது மாணவர்களை வாலாஜா பாத் ஹிந்துமத பாடசாலையில் அங்குள்ள உணவு விடுதிகளில் இருந்து கல்வி பெற வழி செய்தனர். இம்முயற்சியை நிதி வசதி காரணமாக சென்னை நகரத்தார் சங்கம் தொடர்ந்து செய்ய முடியாத நிலையில் பின்பு தோன்றிய ''நகரத்தார் ஐக்கிய சங்கம்'' தொடர்ந்து செய்து வருகின்றது.

மேற்குறிப்பிட்ட நோக்கங்களைக் கொண்டு இயங்கி வரும் சங்கங்கள் நகரத்தார் பொது மக்களால் ஏற்படுத்தப்பட்டு நடந்துவரும் பொது சத்திரங்கள் விடுதிகள் முதலியவைகளைப் பராமரிக்கவும் முன் வந்திருக்கின்றன. மதுரை நகரத்தார் சங்கம் மதுரையில் உள்ள நகரத்தார் விடுதியைத் தங்கள் பராமரிப்பில் கொண்டு வந்து மதுரை வந்து செல்லும் நகரத்தார் மக்கள் குறைந்த செலவில் நிறைந்த வசதி பெறத் தக்க முறையில் செப்பனிட்டு நல்ல முறையில் பராமரித்து வருகின்றது.

திருச்சி நகரத்தார் சங்கத்தினர் திருச்சியில் நகரத்தார்கள் தங்கிச் செல்ல ஏனைய முக்கிய நகரங்களில் உள்ளது போன்ற நகர விடுதி இல்லாக் குறையைப் போக்க சமீபத்தில் கட்டிடத்திற்கான நிதி உதவி திரட்டி ஒரு கட்டிடம் வாங்கியிருக்கிறுர்கள்.

தக்க முறையில் திருத்தி அமைத்து நகரத்தார் பொது மக்களின் நன்மைக்குப் பயன்படுத்த முன் வந்திருக்கின்றது.

கோவை நகரத்தார் சங்கத்தினரும் நகரத்தார் சங்கத்திற்கும் நகரத்தார் பொதுமக்களுக்கும் பயன்படும் வண்ணம் ஒரு கட்டிடம் வாங்க ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

நகரத்தார் ஐக்கிய சங்கத்திலிருந்து நமது நகரத்தார் சமூகத்தினர் மக்கள் தொகை, அவர்களின் வயது விபரம், கல்வி நிலை, செய்துவரும் தொழில்கள், வசித்துவரும் ஊர் முதலியவைகளைக் கொண்ட ஒரு கணக்கெடுப்பு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்டிருக்கின்றது.

மாற்றங்கள் தேவை!

மாநகரி அ. முருகப்ப செட்டியார் அவர்கள்

(மேலாளர் - இரங்கூன் நகர விடுதி - சென்னை.)

உலகம் தோன்றிய காலம் முதல் மாற்றங்கள் நிகழ்ந்தே வந்துள்ளன. அந்த மாற்றம் இரு வகையால் ஏற்பட்டு வந்துள்ளன. ஒன்று தானே நிகழ்வது. மற்றொன்று முயற்சி உடைய ஒருவரோ பலரோ சேர்ந்து நிகழச் செய்வது. எவ்வாறு நேர்ந்தாலும் மாற்றத்தின் அடிப்படை நல்லதற்காக இருக்க வேண்டும். நன்மை பயப்பதாகத் திகழ வேண்டும்.

ஆனால் நன்மை பயப்பதாக இருந்தாலும் மாற்றம் என்று வருகின்ற பொழுது அதை புரிந்தோ புரியாமலோ யாராவது எதிர்க்கவே செய்வார்கள். இது இயற்கை.

அவர்கள் சொல்வார்கள், இவர்கள் சொல்வார்கள் என்று எண்ணினால் எந்த நல்ல காரியத்தையும் செய்ய இயலாது!

எனவே நம் சமூகப் பெண்களின் வாழ்க்கை வளம் பெற - அவர்கள் காலத்தால் மணம் பெற்று மனம் மகிழ்ச்சி கொள்ள அனைவரும் தக்க வகையில் உதவ வேண்டும் என்பதே என் பணிவும் அன்பும் நிறைந்த வேண்டுகோள் ஆகும். இதில் நம் அனைவருக்கும் சம பங்கு உண்டு.

காலத்திற்கும் சமூக நிலைக்கும் ஏற்ற முறையில் திருமண அமைப்பினை உருவாக்கி அதனை செயலுக்குக் கொண்டு வருவதற்குரிய வழி முறைகளையும் திட்டங்களையும் அறிஞர்கள் வகுத்துத்தந்து உதவ வேண்டும்.

சமூகத்தில் நல்ல மாற்றமும் விழிப்பும் ஏற்படும் வகையில் சீர்திருத்தக் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் முதலியவற்றை எழுதுவதும் துண்டுப் பிரசுரங்களைத் தயாரித்து அனைவருக்கும் கொடுத்துக் கருத்துக்களைப் பரப்புவதும் எழுத்தாளர்களுடைய கடமை ஆகும்.

சமூகத்தில் ஏற்பட வேண்டிய நல்ல மாற்றங்களுக்கு மனமுவந்து வரவேற்புத் தந்து மற்றவர்களும் வழிகாட்டுபவர்களாக விளங்கி சமூக நலத்திற்குப் பாடுபடும் சங்கங்களுக்குப் பொருள் ஈந்து, பெருமை மிக்க நமது சமூகம் பெருமை குறையாது வாழச் செல்வப் பெருமக்கள் நல்ல அரணாக நின்று உதவ வேண்டும்.

காலப் போக்கிற்கு ஏற்ப ஏற்பட வேண்டிய மாற்றங்களைத் தங்கு தடையின்றி வரவேற்று நம் இனத்துப் பாட்டன் பாட்டிமார்கள் ஆசி கூறவேண்டும்.

காலத்தையும் பெற்றோரின் பொருளாதார நிலையையும்நன்கு சிந்தித்து ஆடம்பர எண்ணங்களை அடியோடுவிட்டுதேவையான அளவு நகைகள், ஆடைகள், சாமான்களை ஏற்றுக் கொள்ள முன்

வந்து தாங்கள் எதிர்காலத் தாய் என்ற பெருதற்கரிய தன்மை யினைப் பெறப்போகிறவர்கள் என் பதனை உணர்ந்து சிக்கனத்தைப் போற்றி, எளிய முறையில் வாழக் கற்றுக் கொண்டு தம் பெற்றோர் களையும் உடன் பிறந்த சகோதரி களையும் மகிழச் செய்து தாமும் மகிழ்ச்சிமிக்க வாழ்க்கையைப் பெறுவது மணம் நாடி நிற்கும் இளம் பெண்களின்கடமையாகும்.

கால மாறுதல்களையும் சமூகத் தில் நடுத்தர நிலையில் உள்ளவர்க ளின் நிலைமைகளையும் சிந்தித்துப் பார்த்து, விட்டுக் கொடுத்து, சமூ கத்தில் ஏற்பட வேண்டிய மாற்றங் களை வரவேற்று பெண்களைப் பெற் றவர்களிடம் தோதுகளைக் காட்டி எதை விற்குவது தமக்கு முறை தலைகளைச் செய்தால் போதும் என்று எண்ணி, சீர்வரிசை என்ற பெயரால் பல ஆயிரங்களைப் பெற்று ஒருபகுதியினரில் சீரைக் கெடுப்பது சமூகத்திற்குச் செய்யும் பெரும் பாவம் என்று கருதி ஒரு பகுதியினரின் தாழ்வில் ஒருபகுதி யினர் உயர்வது என்ற நிலையினை விட்டு, தம் பெண்களுக்குத் திரு மணம் செய்யும் காலத்து வீணான அந்த விரையம் ஏற்படுவதை நன் குணர்ந்து எல்லாரும்நல்லபடியாக வாழ இயன்றதைப் பெற்றுக் கொண்டுதிருமணங்களை முடிக்கும் நல்ல நோக்கத்திற்கு மணமகனைப் பெற்ற பெருமக்கள் முன் வர வேண்டும்.

வயதுமிக்க பெற்றோர்கள் சீர்வரிசைகளில் குறியாக இருந்தா லும் படித்துப் பட்டம் பெற்று வரும் இளைஞர்கள் விட்டுக் கொடுத்து மணங்களை முடித்துக் கொள்ள விரிவான முறையில் முன் வர வேண்டும். அவ்வாறு அவர்கள் வராதது நம் சமூகத்தில் பெருங் குறையாக விளங்குகின்றது.

நம் மரபினர் பொருளாதா ரத்தின் சிறப்பினை நன்கு அறிந்த வர்கள். நம் பிள்ளைகளில் பலர் பொருளாதாரம் கற்கிறார்கள். மற் றவர்களும் கற்கும் பொழுதே அதனை அறிகிறார்கள். அப்படித பட்ட ஒரு சமூகத்தில் சீர்வரிசை கள் என்ற பெயரால் கணக்கற்ற பணம் விரையமாவது தனிப்பட்ட குடும்பத்தைப் பொறுத்தது என்று எண்ணுவது தவறு. பொருளா தார விரையம் என்பது கொடிய நோய் போன்றது. அது எங்கு தோன்றினாலும் எப்படித் தோன் றினாலும் காரணம் எதுவாயினும் அதனால் சமூகமே பாதிக்கப் படும் அல்லவா?

சமூகம் என்ற வண்டி பெண்க ளின் திருமணங்கள் என்ற பாரத் தைச் சுமக்க முடியாமல் அச்சு வளைந்து சக்கரம் நகராது நிற்கின்றது.

அச்சை நிமிர்த்தி சக்கரத்தை பாதைக்கு ஏற்ப மாற்றி அமைத் தால்தான் வண்டி தட்டுத் தடங்க லின்றி ஓட இயலும்.

இதில் முக்கியமானவர்கள் பையனும் பையனைப் பெற்ற தாயும் தான்!

அவர்கள் காலப் போக்கை யும், சமூக நிலையையும் — வருங் கால நிலையையும் நன்கு சிந்தித்துப் பார்த்து கட்டுப்பாடுகளுக்கும் சிக் கன முறைகளுக்கும் ஆசிகூறி வர வேற்றுச் சமூகத்திற்கு வாழ்வு தர வேண்டும். அவர்கள் அப்படிச் செய்வார்களானால் அவர்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு. காசி ராமேசுவரம் போய் வந்த பலனை விடப்பெரும் பலன் அவர்களுக்குக் கிடைக்கும்.

இளைஞர்கள் காலத்திற்கு ஏற்ற மாற்றங்கள் தேவை என்ப தனைத் தாய்மார்களுககுப் புள்ளி

விவரங்களுடன் எடுத்துக் கூறி அவர்கள் உள்ளங்களில் மாற்றங்கள் ஏற்படவும் சமூகத்தில் நல்ல மலர்ச்சியும் மகிழ்ச்சியும் ஏற்படவும் தங்களால் ஆனவற்றை யெல்லாம் செய்து உதவ வேண்டும்.

இளைஞர் உலகம் நினைத்தால் நடவாதது என்ன? அவர்கள் முயன்ருல் வீடுகளை விற்பதும் வயல்களை அடகு வைப்பதும் சாமான்களை விற்பதுமான இழிநிலைகள் நேராத வண்ணம் காக்கலாம் அல்லவா?

ஒரு தோட்டம் என்ருல் அதில் பெரிய மரங்களும் சிறிய செடிகளும் கொடிகளும் இருக்கும். அதில் சில உயரமாகவும் சில தாழ்ந்ததாகவும் இருக்கும். அது இயற்கை. ஆனுல் அவற்றின் ஒன்றுக்காக ஒன்றினை அழிப்பது தீமை அல்லவா?

சமூகமும் தோட்டத்தைப் போன்றதுதான். செல்வர்கள், நடுத்தர மக்கள் வறியவர்கள் என்ற பலதிறப் பட்டவர்களும் அதில் இருப்பார்கள் ஆனுல் காலப்போக்கிற்கு ஏற்பச்சிலபழக்கங்களால் நடுத்தரமக்களும் செல்வர்களும் கூட நம் மரபில் வறியவர்கள் ஆகிக் கொண்டிருக்கிருர்கள் என்பது பெரும் கொடுமை அல்லவா? வறியவர்களை நடுத்தர மக்களாகவும் செல்வர்களாகவும் ஆக்குவது தான் ஒரு புகழ் பெற்ற பெருமை மிக்க வளம் நிறைந்த சமூகத்திற்கு அழகே தவிர மற்றவர்கள் வறியவர்கள் ஆவதில் யாருக்கு லாபம்? அந்த முறைகளால் சமூகத்திற்கு என்ன பயன்?

சமூகத்தில் மாற்றங்கள் தேவை என்ற கருத்தைக் கூறுகிற போது இந்தச் சீர்திருத்தங்கள் நீங்கள் நினைப்பது போல அவ்வளவு எளிதாகச் சீக்கிரத்தில் நடந்து விடுமா? உங்கள் பேரன் காலத்தில் நடப்பது கூடக்கடினம் என்று சர்வசாதாரணமாகக் கூறி விடுகிருர்கள்.

அத்தகைய அவநம்பிக்கையும் -நடப்பது நடக்கட்டும்என்று எண்ணுகின்ற மனப்பான்மையும் நம்மில் சிலருக்கு இருப்பது பெரு வேதனைக்கு உரியதே ஆகும்.

மனிதர்கள் மனது வைத்தால் நடக்காதது ஒன்றுமில்லை.

மனிதன் சந்திரனில் கால் வைத்த பிறகு நாம் நம் சமூகத்தில் உள்ள பயனற்ற சில பழக்கங்களை மாற்றவே முடியாது என நினைப்பது எவ்வளவு பெரிய துரிப்பாக்கியம்.

எதிலும்விடாமுயற்சியும்-பற்றும், நம்பிக்கையும் இருந்தால் நடக்காதது என்றுமுடிவுசெய்தது கூட நடக்கும். கனவெல்லாம் நனவாகும். சிந்தனைக்கும் செயலுக்கும் எட்டாதது என்று கருதத்தக்கவை யெல்லாம் நாளும் நடந்து வருவதை நாம் காண்கிருேம். அவற்றை ஒப்பிட்டுப் பார்க்கின்ற பொழுது நமது குறிக்கோள்கள் நனவாகத் தக்கவைதான் என்பதில் எள்ளத்தனை ஐயமும் இல்லை.

நம் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களே நம சமூகத்தில் மாற்றங்கள் ஏற்படும், ஏற்படுத்த முடியும் என்பதற்கு எடுத்துக் காட்டுக்களாக விளங்குகின்றன.

உடை,அணிகலன்கள்,உணவு, நடைமுறை, வாகனங்கள், இவற்றில் எல்லாம் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது.

மனைவியை அழைத்துக் கொண்டு வெளிநாடு செல்ல உடன் படாத சமூகத்தில் இன்று திருமணமாகிப் பத்து தினங்களுக்குள்ளாகவே மனைவியை அழைத்

துக் கொண்டு வெளிநாட்டிற்கு விமானத்தில் பறக்கும் இளைஞர்களைக் காண்கின்றோம். அதுமட்டுமா? பெண்களை மட்டும் அமெரிக்கா, ஜெர்மன், பிரான்ஸ், பிரிட்டன் போன்ற வெளிநாடுகளுக்கு அனுப்பும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இது குறிப்பிடத்தக்க பெரு மாற்றம் இல்லையா?

கடல் போன்ற வீடுகள் சொந்த ஊரில் இருக்கக் கட்டுத் துறைக்கும் உதவாது என்று கருதத் தக்க இடங்களிலும் காற்றுப் புகாத கல் மண்டபங்களிலும் குடி நீர் வசதியற்ற இடங்களிலும் 25, 50, 60 என்று வாடகை கொடுத்து வாழும் நிலை நேர்ந்தது மாற்றம் இல்லையா?

அவ்வளவு ஏன்? கல்யாண வைபவம் ஆறு நாட்களிலிருந்து ஒன்றரை நாள் ஆனதே மாற்றம் தானே?

இவ்வாறிருக்கக் கல்யாணச் செலவுகள் மட்டும் ஏன் பத்தாயிரத்திலிருந்து லட்சம் ஆக வேண்டும். அது பத்தாயிரத்திலிருந்து ஆயிரம் ஆகக் கூடாதா? ஆக்க முடியாதா? ஆக்காவிட்டால் எதிர் காலம் என்ன ஆகும்?

தாம் பெற்ற பெண்ணை மணம் முடித்து மாட்டு வண்டியில் அனுப்பும் பெற்றோர் தன் பையனுக்கு வாழ்க்கைப் பட்டு வரும் பெண் காரில் வரவேண்டுமென்று விரும்புவது விநோதமானது மட்டுமல்ல. வேதனை தருவதும் ஆகும். கொடுப்பதும் கொள்வதும் ஒப்பாக இருக்க வேண்டுமல்லவா? நாம் வணிகர்கள் அல்லவா?

பையனுக்கு சீர் வரிசைகளை அடுக்கிக் கேட்டும் தாய்மார்கள் நாம் பெற்ற பெண்களுக்குக் கேட்பார்களே என்று எண்ண வேண்டாமா? நாங்களும் கொடுப்போம் என்று வீம்பு போட்டுப் பணத்தை விரையமாக்குவதில் நமக்கோ சமூகத்திற்கோ என்ன பயன்?

நம் சமூகத்து ஆண்களும் பெண்களும் பக்தியும் பண்பும் உலக இயலும் அறிந்தவர்கள். அவர்களும் இளைஞர்களும் காலத்திற் கேற்ற மாற்றங்கள் தேவை என்பதை உணர்ந்து அவற்றை மேற்கொண்டு வாழ முன் வர வேண்டும். அந்த நிலை ஏற்பட்டால் நமது சமூகம் பொன்னான சமூகமாகப் புகழ்மிக்க மரபாக மாறும் பழைய பெருமையினை மீண்டும் பெறும் என்பதில் ஐயமில்லை!

*

அதிசயம்! ஆச்சரியம்!

அடுத்த இதழ் வெளிவர இன்னும் எத்தனை மாதங்கள் ஆகுமோ? என்ற எண்ணம் எல்லாரிடமும் நீக்கமற நிறைந்திருக்கிறது. நம் நகரத்தார் இதழ் பற்றித் தான் குறிப்பிடுகிறோம்.

அதனால் மிக விரைவில் இந்த இதழ் வெளி வந்து விட்டதையே ஆச்சரியம் ... அதிசயம் என்று குறிப்பிட்டுள்ளோம்.

ஏழையர்க்கு உதவும் இனிய நல்ல செல்வம்

செல்வி புலவர் ந. இராமாயி
விரிவுரையாளர், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி
மேலைச் சிவபுரி

உலகிலே நாகரிகம் நனிமிளிரும் நாடுகள் கிரேக்கம், சீனம், பாபிலோனியம், எகிப்து, இந்தியா முதலியனவாம். இவற்றினும் பண்டு தொட்டு, நாகரிகத்தின் சிறப்பு மிக்கது நம் பாரத நாடு. நாகரிக நாடு எனின் கல்வி முன்னேற்றமும் முதன்மை பெறும் தானே? மூவேந்தரினும் பாண்டியர், இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் முச்சங்கங்களால் வளர்த்தனர்.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழிலும் நம்மவர் சிறந்து விளங்கினர். நாடகத்தமிழ் நன்முறையில்வளர்க்கப்பட்டுஆடவர், பெண்டிர் என்ற பாகுபாடின்றி இருசாரரும் கலைத்திறன் வாய்ந்தவர்களாக விளங்கினர்.

கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடி; "மூத்த மொழி" — என்று சிறப்பிக்கப் படுவது நம் குடி; நம் மொழி.

"ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப"—

"பிறப்பே குடிமை .... முறையுறக்கிளந்த ஒப்பினது வகையே"—

"அறிவும் அருமையும் பெண்பாலன"—

முதலான, தொல்காப்பிய நூற்பாக்களால், ஆண் மகனும், பெண் மகளும், அறிவினும், ஆற்றலினும், பண்பினும், அன்பினும், ஒழுக்கத்தினும் தலைசிறந்து விளங்கினர் என்பதாம்.

பண்டைக்காலத்திலேயே ஔவையார், ஆதிமந்தியார், வெள்ளி வீதியார், காக்கை பாடினியார், காவற்பெண்டு, குறமகள் இளவெயினி, பேய்மகள் இளவெயினி, பாரிமகளிர், பூதப் பாண்டியன் தேவியார், புனிதவதியார், காரைக்காலம்மையார், முதலான பலபெண்கள் பெண் குலத்தின் பெருவிளக்குகளாய் விளங்கினர். காரணம் அவர்களின் கல்வி வளர்ச்சியே!

இடைக்காலத்திலே சமண பௌத்த சமயத் தாக்குதல்களால்,பெண்டிர்பழிக்கப்பட்டனர்; பெண்மைக்குக் களங்கம் காட்டி, நாட்டிலும்,ஏட்டிலும், சமுதாயத்திலும்,பெண்கள் நலிவுற்று, மெலிவுற்று, வருந்தத் தக்க சீர்கேடான நிலைக்குள்ளாயினர்; பெண்-கல்வி வளர்ச்சி தேக்கமுற்றது.

இக்காலத்திலே, பெண்கள் கல்வியிலே மிக்க ஆர்வம் காட்டி, முன்னேறி, அறிவுடையோராய்த் திகழ்கின்றனர். கலைத்திறன் வாய்ந்தவர்களாகவும், இயற்றமிழ்ப்புலமை மிக்குடையோராகவும், பொறியியல்துறை, மருந்துவத்துறை என்ற இன்னோரன்ன துறைகளிலே தேர்ச்சியுடையோராகவும் பெண்கள் விளங்கிச் சிறந்துள்ளனர்.

ஆசிரியர் தொல்காப்பியர், 'மன்னர் பின்னோர்'- என்று குறிப்பிடுவது வணிகரையேயாம். நினைப்பிற்கெட்டா நெடுங்காலத்திற்கு முன்னரே, திரைகடலோடித் திரவியம் தேடியவர்கள் செட்டியார்கள் அன்றோ? அத்தகைய செல்வச் செழுமை வாய்ந்த நகரத்தார் இனத்திலும், ஆண், பெண் என்ற பாகுபாடின்றி, அனைவரும், அறிவுடையோராய்த்திகழ்ந்தனர் என்பதற்குச் சிலப்பதிகாரக் காப்பியத் தலைவி, கண்ணகி, புனிதவதியார் காரைக்காலம்மையார், மணிமேகலையிலே காணப்படும், ஆதிரை விசாகை என்போரது வரலாறே சான்றும்.

"மாதரார் தொழுதேத்தும் வயங்கிய பெருங்குணத்துக் காதலாள்"—கண்ணகியின் மாண்பினை என்னென்று கூறுவது?

வடமீனின் திறம் படைத்த கண்ணகி ஒருத்தியே வணிகர்குலப் பெண்களின் கற்புத் திறத்திற்குச் சான்றுவாள்.

காரைக்காலம்மையார் இன்றும் நம் இனப்பெண்களுக்கு எடுத்துக்காட்டாய்ப் புகழின் ஒளியாய், அன்பின் உருவாய்ப், பண்பின் சிகரமாய்ச் சிறந்த சிவநெறிச் செல்வியராய்க்கற்பிற்கணிகலனாய்ப் பெண் குலத்தின் பெருமைக்கு இலக்கணமாய் இலங்குகின்றாரன்றோ?

இத்தகைய வீறுபடைத்த நகரத்தார் சமுதாயம் எழுச்சியுற வேண்டுமெனின், மற்ற இனத்தார் போன்று நம் இனப் பெண்களும், 100க்கு 100 கல்வியறிவுடையவர் என்றவகையிலே வளர்ச்சி மிக்கோராய், விளங்குதல் வேண்டும். கற்குங்காலை கற்பன கசடறக் கற்று, சமயத்துறை, அரசியல்துறை, சாதி சமயவெறியென்ற புறக்கவர்ச்சியில் ஈடுபாடின்றி மனத்தினை ஒருவழிப் படுத்தி கற்க வேண்டும்.

"சென்ற இடத்தாற் செல
விடாது தீதொரீஇ
நன்றின் பாலுய்ப்பது அறிவு'

என்பதைஓர்ந்து உணர்தல் வேண்டும். பெண்ணின், பெருந்தக்க யாவுள, கற்புநிறையின் என்பதை உன்னல் வேண்டும். "ஒழுக்கமே மக்கட்பண்பு" என்பதை அறிதல் வேண்டும்.

கற்றுத்தேர்ந்த பெண், குடும்பப் பொருளாதாரத்தை நன்கு அறிந்து, பொருள் வழுக்கல் இல்லா வாழ்க்கை இயற்றுவாள். பகுத்தறிவுடைய பெண், பகட்டு வாழ்க்கை நடத்த விரும்பமாட்டாள். அறிவுத்திறத்தால் தம் குழந்தைகளையும் புலமைச் சான்றோராய் வளர்ப்பாள்.

"பிள்ளையும் படிக்க
வேண்டாம்
பிரப்படிபடவும்வேண்டாம்"

என்றநிலை முற்றும் மாறி, புலமைப் பெண்டிராய்ப் புகழும் நிறைவும் பெறுவர். இன்று, நலிவுற்று, பொலிவுற்று, மெலிவுற்று வருந்தும் நம் இனப்பெண்கள் கேடில்விழுச்செல்வமாம் கல்வியைச் சரிவரப் பெறின் சால்பும்சீர்மையும் பெறுவர்.

சமுதாயமுன்னேற்றத்திற்குப் பெண்கல்வி தேவை. பெண்களின் பொருளாதாரஉரிமைக்குப்பெண் கல்வி தேவை. நம்மவர் கட்டுப்பாடாக முன்னேறப் பெண்கல்வி தேவை. நாகரிகத்தின் கண் பெண்ணே, பெண்ணின் நலம் கல்வியே. கல்வி பெற்றார் நாகரிகம் பெற்றார்; கண் பெற்றாராவர்.

"இல்லதென் இல்லவள் மாண்பானால்?"— என்பதைத் தெரிந்து தேர்வோமாக!

ஆண்-பெண் என்ற இருபிரிவினரும் கண்களுக்கு ஒப்பாவார், எனில் ஒன்று ஊனமானாலும் பயன் என்ன? ஊனப்பிறவியையும் ஊனமற்றதாக்க வல்லது கல்விச் செல்வமேயாகும். நம் மரபுப் பெண்கள் அனைவரும் அச்செல்வத்தைப் பெற்று உயர வேண்டும்.

ராகு காலம்

வேகுப்பட்டி. இராம. சோலையன் மதுரை.

ராகு காலம் என்பது கெட்டகாலம் என்றும், அந்த நேரத்தில் எது செய்தாலும், அந்தக் காரியம் நன்மையாக முடியாது எனவும் பெரியோர்கள் சொல்லக் கேட்டு இருக்கின்றோம். ஆனால் ஒவ்வொரு தினத்தன்றும் எந்த காலம் ராகுகாலம் என எளிதாக கண்டறிய ஒரு சிறிய பாடலை பின் பற்றி வருகின்றோம்.

அப்பாடல்:- திருநாள் சந்தடியில் வெய்யிலில்
புரண்டு விளையாட செல்வது ஞாயமோ?

இப்பாடல்படி வாக்கியத்தின் முதல் எழுத்துக்களைக் கொண்டு வரிசையாக திருநாள் - திங்கள் என்றும், சந்ததி-சனி என்றும், வெய்யிலில் - வெள்ளி என்றும், புரண்டு - புதன் என்றும், விளையாட - வியாழன் என்றும், செல்வது - செவ்வாய் என்றும், ஞாயமோ? - ஞாயிறு என்றும் வரிசைப் படுத்தி காலை 7.30 திலிருந்து ஒன்றறை மணி வீதம் கூட்டிக் கணக்குப் பார்த்து ராகு காலத்தை எளிதாக தெரிந்து கொண்டு பின் பற்றி வருகிறோம்.

திருமுகம்

'பழநி மலைக் காவடி' தொடர் கதையில் பழனிபஞ்சாமிர்தத்தின் இன்சுவையைக்கண்டேன். பாத்திரப் படைப்பிலும் பாத்திரங்களின் குணநலன்களை உருவாக்குவதிலும் ஆசிரியர் தமது எழுத்திறனையும் கையாண்டிருக்கிறார். நகரத்தார் சமூகத்தினரின் அன்றாட வாழ்க்கைச் சூழ்நிலையை மையமாகக்கொண்டு கதையைத் துவக்கியிருத்தல்போற்றுதற்கு உரியது. தொடர்கதைதொடர்ந்து குறித்த காலத்தே வருமாயின் இன்சுவை இன்னும் பெருகும்.

தேவகோட்டை
அரு. இலக்குவன், பி.ஏ.பி.எல்.
வழக்கறிஞர்
சென்னை.

கதைஅருமை-தொடக்க இதழிலேயே இராமநாதன்செட்டியாரும் சீதை ஆச்சியும் வெகுவாக எங்களைக் கவர்ந்து விட்டார்கள். நீங்கள்தான் இரண்டு மாதம் மூன்று மாதத்திற்கு ஒருமுறை இதழை வெளியிட்டுக் கழுத்தை அறுக்கிறீர்கள்.

மேலைச் சிவபுரி
லெ. சந்திர சேகரன்.

பரந்து விரிந்துள்ள பாரத நாட்டில் மிகக் குறைந்த ஜனத்தொகை கொண்ட சமூகங்களில் ஒன்றாகிய நம் நகரத்தார் சமூகம் செய்துள்ள மிகப் பெரிய சாதனைகளை எடுத்தியம்ப நகரத்தாரி இதழ்போன்ற வெளியீடுகள் பெரிதும் பயன்தரும். அதோடு மிகவும் அவசியமும் ஆகும்.

திங்கள் இதழாக வெளிவரும் நகரத்தார் நன்குவளர்ச்சி பெற்று வார, நாள் இதழாக வெளிவந்து நம் சமூகத்திற்கும் நாட்டிற்கும் நல்ல ஆக்கப் பணிகள் பல புரிய வேண்டும் என்று இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

ந. இலக்குமணன்,
37, கன்னியா குளம் ரோடு,
விழுப்புரம்.

காந்தியடிகள் தாம் மட்டும் வளர எண்ணாமல் நாட்டின் வளர்ச்சியே தம் வளர்ச்சி என எண்ணினார். நாடு விடுதலை பெற்றது. அவர் மகாத்மா ஆனார். அதுபோல நம் குலத்துச் செல்வப் பெருமக்கள் சுற்றம் தழுவி இனத்தாரை ஆதரித்துப் பழைய பெருமையினை உண்டாக்க வேண்டும்.

சுற்றத்தால் சுற்றப் பட
ஒழுகல் செல்வம்தான்
பெற்றத்தால் பெற்ற
பயன். (குறள். 524)

என்ற வள்ளுவப் பெருமான் வாக்கிற்கேற்ப நம் குலத்துப் பெருமக்கள் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைப்பார்களாக.

சுப. கருப்பன் செட்டி,
82, அ.மு. தெரு,
பள்ளத்தூர்.

சென்னை-14 - நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸில் அச்சிடப் பெற்று
சேது நிலையத்திற்காக வெளியிடுபவர் பழ. சேது ஆச்சி.,
12, இராமாநுசம் தெரு, சென்னை-17 தமிழ் நாடு.
ஆசிரியர்—புலவர் நாகசண்முகம்